பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை
A/L 90
கலை/வர்த்தகபிரிவு
யூலை 15 வெள்ளி
பி. ப. 3-00 மணிக்கு
விரிவுரையாளர் பற்றிய விபரம் புதன் உதயனில்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை
A/L 90
வி.. ங்கியல்
திரு. தம்பிராஜா
சனி, ஞாயிறு 2-00 p. m.
தாவரவியல்
திரு. பாலா
சனி, ஞாயிறு
1-00 — 2-00 p.m.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆனி மீ 30 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஸ்தா பிறை 29 ( 14 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 121

## தமிழ்ப் பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 14

வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம் வரைக்கும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட் இயக்கம்) இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

புளொட் இயக்க முகாம்களின் மீது இந்தியப் படையினர் தாக்குதல்கள் மேற்கொள்வதைக் கண்டித்தும்—

ரெலா இயக்கத் தலைவர் சாந்தன் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும்—

காந்தனுக்கு அஞ்சலி செலுத்து முகமாகவும்—

வவுனியாவில் அமைதிப் படையினர் நடத்தையைக் கண்டித்தும்—

இந்தக் ஹர்த்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

யாழ். நகரைப் பொறுத்தமட்டில் நேற்றுக் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டமும் குறைந்திருந்தது. வாகனசேவைகள் காலையில் குறைந்த அளவில் நடந்த போதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அதிகாரிகள் மூவரும் திருமலைக்கு

### கொழும்பிலும் பேசுவர்

யாழ்ப்பாணம் ஜூலை 14

யாழ்ப்பாணம் வந்திருந்த இந்திய அரசின் பிரதிநிதிகள் மூவரும் திருகோணமலை சென்றுள்ளார்கள். அவர்கள் அங்கிருந்து கொழும்புக்குச் செல்வார்கள். அங்கு இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்கள்.

கொழும்பிலிருந்து அவர்கள் இந்தியா செல்லுமுன் வடக்குக் கிழக்குச் சம்பந்தமான பல விடயங்கள் குறித்து கொழும்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார்கள் என அறிய வருகின்றது.

இப்போதைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்களின கருத்தை அறிந்து கொள்வதற்காக இந்திய அரசின்

[6 ஆம் பக்கம் பார்க்க)

## முத்திரை விவகாரம் விசாரிப்பதற்காக கொழும்பிலிருந்து மூவர்

யாழ்ப்பாணம் ஜூலை 14

காணமற்போன முத்திரை விவகாரம் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கென மூன்று அரச கணக்காய்வாளர்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்ட தபால் பொதியில் இருந்து 41ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் காணமற் போனது குறித்தும் சுன்னாகத்துக்கு அனுப்பப்பட்ட தபால் பொதிகளில் இருந்து காணமல் போன தபால் பொதி குறித்தும் விசாரணை நடத்தவே இவர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இது தொடர்பாக தபாற் திணைக்கள உயரதிகாரிகள் ஏற்கனவே விசாரணைகள் மேற்கொண்டிருந்த போதும் எதுவித தடயங்களும் இதுவரை கிடைக்கவில்லை எனக் கூறப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இடைத் தேர்தல்கள் இன்று:

# தென் இலங்கையில் பெரும் பதற்ற நிலை!

## யு.என்.பியினர் 6 பேர் கொலை; இரண்டு வங்கிகளில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூலை 14

**தென் இலங்கையில் நான்கு தொகுதிகளில் இன்று இடைத் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் இவ்வேளையில், அங்கு பெரும் பதற்றநிலை உருவாகியிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.**

**இடைத்தேர்தல் நேரத்தில் வன்செயல் சம்பவங்கள் பெரும் அளவில் நிகழலாம் என அதிகாரிகள் மட்டத்தில் அச்சம் தெரிவிக்கப்பட்டது.**

**இதேசமயம் நேற்றும், நேற்று முன்தினமும் தெற்கில் ஆங்காங்கே பல வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.**

தென் இலங்கையில் நேற்று முன்தினம் யு. என். பி ஆதரவாளர்கள் ஆறு பேர் தனித் தனி சம்பவங்களில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

கதிரிகமவில் சர்க்கரை ஆலை ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த இரண்டு யு. என். பி. உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இங்கினியாக்கல என்ற இடத்தில் புதிதாக யு. என் பி.யில் சேர்ந்த முன்னாள் ஜே. வி. பி உறுப்பினர் ஒருவர் சுடப்பட்டு உயிரிழந்தார்.

மாத்தறையில் பிரதி அமைச்சரின் உதவியாளர் என்று கூறப்படும் நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்,

இவர்களை விட வேறு இரண்டு யு. என். பி. ஆதரவாளர்கள் தென் மாகாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை தென் மாகாணத்தில் இரண்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



ஜே. ஆரும் டிக்ஸிற்றும் உப்பிடி எத்தனை தடவையள் பாருங்கோ இரகசியம் பேசினவை. அனால் எங்களுக்குத் தான் எதுவும் கைக்கு வருவதாக இல்லை...!

## ஜெயவர்த்தன - டிக்ஸிற் சந்தித்துப் பேச்சு!

கொழும்பு, ஜூலை 14

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசினார்.

சென்னையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் இந்திய அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை திரு. டிக்ஸிற், ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் இந்தச் சந்திப்பின்போது எடுத்துச் சொன்னார் என்று தெரிய வருகிறது. (உ-எ)

### இரத்தினபுரி உட்பட 4 தொகுதிகளின்

## இடைத்தேர்தல் முடிவுகள் நள்ளிரவு வெளியாகும்

கொழும்பு. ஜூலை 14

கட்டுகம்பளை, கெக்கிராவ, வெலிமட, இரத்தினபுரி ஆகிய தொகுதிகளின் இடைத்தேர்தல் முடிவுகள் இன்று நள்ளிரவு வாக்கில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடைத் தேர்தல்கள் இன்று நடைபெறுகின்றன. வாக்குகள் எண்ணப்படுவது இன்று இரவு 8 மணியளவில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

நான்கு தொகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 3 ஆயிரம் பொலீஸார் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.

தேர்தல் முடிவுகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம

14 - 7 - 1988
ஆனி– 30
வியாழக்கிழமை

சுபநேரம்:
07-30 முதல் 09-00 வரை

ராகுகாலம்:
01-30 முதல் 03-00 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## அமைதிப் படையினர் நேற்று தீவிர ரோந்து

யாழ்ப்பாணம், ஜூலை14

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா வரையுள்ள கண்டி வீதியின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று இந்திய அமைதிப் படையினரின் ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

நேற்று நடைபெற்ற ஹர்த்தால் காரணமாக படையினரின் ரோந்துப் பணிகள் துரிதப்படுத்தப் பட்டதாகச் சொல்லப் பட்டது.

சகல சென்றிகளிலும் உள்ள இராணுவத்தினர் காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற அனைத்து வாகனங்களையும் பூரண சோதனையிட்டனர். பயணிகளும் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர்.

இதேபோல் கிளிநொச்சி, முல்லைத்திவுப் பகுதிகளில்இருந்து வந்த பஸ் பயணிகளும் மிகத் தீவிர சோதனைக்குட் படுத்தப்பட்டனர்.

வீதியின் இருமருங்கும் பெரும் எண்ணிக்கையான இந்தியப் படையினர் காவல்புரிந்தனர்.

யாழ்ப்பாணத்திலும் படையினரின் சோதனை நடவடிக்கைகளும்,ரோந்தும் பணிகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன.

(க-10)

### வெள்ளி, சனிக்கிழமைகளில்

## யாழ்தேவி ரயில் கிளிநொச்சி வரும்

கொழும்பு, ஜூலை 14

யாழ்தேவி ரயில் வெள்ளி, சனி தினங்களில் கொழும்பிலிருந்து கிளிநொச்சிவரை - வந்து திரும்பும் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஏனைய தினங்களில் வழமைபோல் வவுனியா வரையே யாழ்தேவி சேவையில் ஈடுபடும்.

வெள்ளி, சனி தினங்களில் காலை 5-45 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்படும் யாழ்தேவி பிற்பகல் 12-48 மணிக்கு கிளிநொச்சியை வந்தடையும்.

கிளிநொச்சியை விட்டு பிற்பகல் 2-10 மணிக்குப் புறப்படும் யாழ்தேவி இரவு 9-40க்கு கொழும்பைச் சென்றடையும்,

ரயில்வே திணைக்களம் இத்தகவலை நேற்று வெளியிட்டது. (உ-எ)

## முல்லைத்தீவின் கரையோரங்களில் படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம் ஜூலை 14

முல்லைத்திவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் நேற்று இந்திய அமைதிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தீவிர சோதனையிடப் பட்டன.

கடந்த செவ்வாய்க் கிழமை முல்லைத்தீவுக் கடற்பகுதியில் சென்று கொண்டிருந்த இந்திய அமைதிப் படையினரின் படகு மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும்—

இதனால் இரண்டு ஜவான்கள் பலியானதாகவும் 16 ஜவான்கள் காயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதன் காரணமாகவே முல்லைத்திவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் இந்தியப் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

# விடுதலைப்புலிகள்-இந்தியதரப்பு பேச்சுக்கள் முற்றாக முறிந்தன

## ஆணையாளர் சிவஞானம் தெரிவித்த தகவல்

— உதயன் அலுவலகப் பிரதிநிதி: ந. வித்தியாதரன் —

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் சென்னையில் நடைபெற்ற பேச்சுக்கள் முற்றாக முறிவடைந்து விட்டன.

சுமார் ஐந்து மாதங்கள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பயன் ஏதும் தராமல் முறிவடைந்தமை பெரும் கவலைக்குரியதாகும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் உதயன் பிரதிநிதியிடம் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த அக்டோபரில் மோதல்நிலை உருவான பின்னர் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறுவதற்கான சூழ்நிலை கடந்த பெப்ரவரியில் தான் உருவானது.

"பேச்சுவார்த்தைகள் சென்னையில் உள்ள தமது பிரதிநிதி திரு. சதாசிவம் கிருஷ்ணகுமாருடன் நடத்தப்பட வேண்டும்" என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை கடந்த பெப்ரவரி 15இல் இந்தியத் தரப்பினரிடம் நான் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்தேன். அப்போது தொடங்கிய பேச்சுவார்த்தைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க]

மங்களகரமான
திறப்பு விழா
14-07-88 வியாழக்கிழமை
காலை 8-00 மணி
579, OVER SEAS TRAVELS
எம்மால்
வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்
உடனடியாகப்
பெற்று கொடுக்கப்படும்.
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
86, Point Pedro Road,
Nallur Market,
JAFFNA. (5054)

திறப்பு விழா
"THE BEST"
PHARMACY & GROCERY
"த பெஸ்ட்"
பார்மஸி & குரோசறி
142, ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
நேரம் :
பிற்பகல் 6-00மணியளவில்
காலம் :
14-7-88 இன்று
வியாழக்கிழமை
அன்பர்கள், ஆதரவாளர்கள்
யாவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
உரிமையாளர் :
S. M. முஷ்தார்
(5059)



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

### வீடுகாணி விற்பனைக்கு

வேலணைகிழக்கு முத்து மாரியம்மன் கோவில் ரோட்டில் 10 பரப்புக் காணியும் எட்டு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோமநாதன் 369/2 நாவலர் ரோட் யாழ்ப்பாணம் அல்லது M. நவரெத்தினம் 14A, விதானைவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (4996)

### காணி விற்பனை

உடுவில் மகளிர் பாடசாலையில் இருந்து 200 யார் தூரத்தில் அமைந்துள்ள ''டச்சு ரோட்டில்'' சகல வசதியும் கொண்ட 4பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு J. T. வின்சிலோ C/o Dr. சிவசந்திரன், மானிப்பாய் ரோட், உடுவில். (4911)

## தேவை

இரும்புத் தொழில் பழகுவதில் ஆர்வமுள்ள ஆண்கள் தேவை: மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: ரவி – என்ஜினியரிங் வேக்ஸ் 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/5738)

### மணிக்கூடு திருத்துனர் தேவை

கைக்கடிகாரம், எலக்ரோனிக் கைக் கடிகாரம் திருத்துவதில் தேர்ச்சி பெற்றோர்உடன்தேவை. திறமைக்கு ஏற்றவகையில் வேதனம் வழங்கப்படும். நேரில் வரவும்: ''சிவா வாச் வேக்ஸ்'' 185, நவீன சந்தை யாழ்ப்பாணம். (4906)

### மணமகன் தேவை

இந்துவேளாளர்குலத்தைச் சேர்ந்த, Accountancy படித்த அமெரிக்க குடியுரிமையுள்ள 12 ல் செவ்வாய் உள்ள, 27 வயது அழகிய பெண்ணுக்கு, Doctor, Engineer, Accountant தராதரம் உள்ள மாப்பிள்ளையை பெற்றோர் விரும்புகிறார்கள். மணமகனுக்கு அமெரிக்கா செல்வதற்கான சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு விலாசம் 277, C/o உதயன் யாழ்ப்பாணம். (4908)

### கல்வி

Book - keeping and Accounts, Office Practice வார இறுதி வகுப்புக்கள் - எல்லாப்பரீட்சைகளுக்கும் – C. I. M. A London பரீட்சையில் இப்பாடங்களில் அதிவிசேட சித்திகள்பெற்றவரும், S. T. C. A. நிர்வாகியுமாகிய இ. சந்திரபாலனால் போதிக்கப்படுகின்றன. தொடர்பு: S. T. C. A. 149, (37) சிவன்பண்ணை வீதி, [ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தின் பின் வீதி] யாழ்ப்பாணம். (4912)

### கல்வி - பரீட்சைகள்

பிற்மன் லண்டன் பரீட்சைகள் – சுருக்கெழுத்து தட்டெழுத்து மற்றும் பாடங்களில் 17-7-88 எமது நிலையத்தில் நடைபெறும். பரீட்சை நேர அட்டவணை, பிரவேசப் பத்திரம் ஆகியவற்றை பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளவும். 88 டிசம்பர் பரீட்சைகளின் விண்ணப்ப முடிவு 30-9-88. வெளி மாணவர்களும் தோற்றலாம். தொடர்பு S. T. C. A. 149, (37) சிவன்பண்ணை வீதி, (யாழ் / வைத்தீஸ்வரா கல்லூரியில் இருந்து சிவன்பண்ணை வீதி வழியாக 100 யார்) யாழ்ப்பணம். (4913)

### TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### தவறிவிட்டது

விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் ஆகியஎனது அடையாள அட்டையும் (166969) லைசென்ஸ்சும் சாளிபாஸ்சும் சாவகச்சேரிக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேம். தகுந்த சன்மானமும் வழங்கப்படும். (5032)

அடையாள அட்டை V. 437661430 செல்வி பத்மினி சபாபதி ஆகிய எனது அடையாள அட்டை சச்சேரி பஸ் நிலயத்திற்கும், யாழ். ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரி காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (4910)

### வகுப்புகள்

Radio T.V Air-Conditioning, Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டமெக்கானிசம், வைண்டிங் Typing Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (5044)

தமிழ் ஆங்கில, சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Spoken English with Grammar ஆங்கிலம் பேச, எழுத இலக்கணத்துடன் மூன்று மாத பயிற்சி வகுப்புக்கள். ஆரம்பம் 16/7/88 சனி மாலை 4 மணி Bitsmans Institutes Manipay. (4992)

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar by S. B. Iyar புதிய பிரிவு தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்காக ஆரம்பம் 21- 07- 88 நேரம் பகல் 10 மணி – 12 மணி வரை. 12, வைமன்வீதி, நல்லூர். (5050)

### சோதிடம்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம் முதலான விடயங்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சோதிட விற்பனரை நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்க. 'சக்திசரவணா' 210, கஸ்தூரியார் வீதி, இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4903)

### மாந்திரீக பரிகாரம்

தொழில் விருத்தி மங்கலமான மண வாழ்வு மனைகளில் மங்கலம் நோய் பிணி திரல் சத்துரு மித்துருவா தல் போன்ற சகல விடயங்களுக்கும் பாரம்பரிய பரம்பரை சோதிட மாந்திரீக பரிகாரகரால் தீர்வு காணப்படும். நேரில் வருக. 'சக்தி சரவண' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) (4904)

### துளபகிரி சோதிடம்

வெளிவந்து விட்டது. வியாழமாற்றம் சனி வக்கிரிப்பில் உங்கள் பலன் இலங்கையின் இராசி துலாமா, கும்பமா (ஆய்வு) குருதோசம் நீங்க வழிமுறைகளை சனி தோசம் நீங்க நாராயண மந்திரம் மற்றும் பல அம்சங்களுடன் எங்கும் கிடைக்கும். (4909)

### HOUSE FOR RENT OR LEASE

Near Manohara Theatre at Navalar Road, Interested Parties. Between K. K. S Road and Kasthuriyar Road. Contact 150, Navalar Road, Jaffna. (4915)

### HOUSE HOLD ITEMS FOR SALE

T. V. Fridge, Sofa set, Dinning Table, Dressing Table. Almira Show Case for Shops (Big & Small), Beds, Study Tables and Sewing Machine. Contact 150, (Old No) Navalar Road, Jaffna. (Between K. K. S Road and Kasthuriyar Road) (4914)

# முல்லைத்தீவுப் பகுதியில் வெள்ளத்தால் பயிர் அழிவு

ஒட்டுசுட்டான், ஜூலை14

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த ஒருவார காலமாக பரவலாகப் பெய்யும் மழையால் உப உணவுப் பயிர்கள் நாசம் அடைந்துள்ளன.

முத்து ஐயன் கட்டுத் திட்டத்தின் கீழ் பயிர் செய்யப்பட்ட மிளகாய், வெங்காயம், நிலக்கடலை அழியும் நிலையில் உள்ளன.

இதுவரை நூற்றுக் கணக்கான ஏக்கரில்பயிர்கள் நாசமாகி விட்டன.

இதனால் விவசாயிகள் சொல்லொணத் துன்பத்தில் மூழ்கியுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க மிளகாயின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டிருக்கிறது.

அத்துடன் வெங்காயத்தின் விலையும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-113)

# மெதடிஸ்த சபையை சேர்ந்த நால்வருக்கு மேற்கு ஜெர்மனி அழைப்பு

வடமராட்சி, ஜூலை 14

இலங்கை மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த நால்வருக்கு மேற்கு ஜெர்மனியிலிருந்து விசேஷ அழைப்பு வந்துள்ளது.

அண்மையில் மேற்கு ஜெர்மனி மெதடிஸ்த வாலிபர் முன்னணி இலங்கைஎங்கும் குறுகிய கால சுற்றுலாப்பணியை மேற்கொண்டு மெதடிஸ்த வேதஆய்வு ஒன்றையும் நடத்தி இருந்தது.

இவர்கள் மேற்கு ஜெர்மனியில் மாநாடு ஒன்றை ஆகஸ்ட் மாத முதற் பகுதியில் நடத்த உள்ளதால் உலகின் பல பாகங்களில் உள்ள மெதடிஸ்த வாலிபர்களுக்கு அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்து நான்கு வாலிபர்களுக்கு அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வாலிபர்களில் இருவர் தென்இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

மற்றும் இருவரில் ஒருவர் வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த வைத்தியத்துறை மாணவன் நிர்மலன் ரத்தினம் மற்றவர் வதிரியைச் சேர்ந்த செல்வி மலரினி அரியரத்தினம்.

இவர்கள் மேற்கு ஜெர்மனி சென்று ஒரு மாதகாலம் விசேஷ ஆய்வினையும் பயிற்சிகளையும் பெற்று நாடு திரும்ப உள்ளார்கள். (இ-160)

## வைத்தீஸ்வரா அதிபருக்கு பாராட்டுவிழா

கொக்குவில் ஜூலை 14

பிரபல எழுத்தாளரும், பத்திரிகை ஆசிரியரும் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபருமான திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி) முதுகலைமாணிப் பட்டம் பெற்றதைக் கௌரவிக்குமுகமாக யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் மன்றத்தினரால் பாராட்டுவிழா ஒன்று நடாத்தப்பட உள்ளது.

16ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் யாழ். வைத்தீஸ்வரா விவேகானந்தா மண்டபத்தில் பழைய மாணவர் மன்ற உபதலைவர் திரு. டபிள்யூ எஸ். செந்தில்நாதன் தலைமையில் விழா நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் சிறப்புரையாற்றுவார். வித்தியாலய உபஅதிபர் திரு. எஸ். இராசதுரை, ஜனப் எம்.எஸ். ஏ. ரகீம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

பழைய மாணவர் மன்ற உபதலைவர்களில் ஒருவரான திரு. எல். பக்கீர்சாமி வாழ்த்துப் பாமாலை வழங்குவார்.

திரு. எம். ஜெகதீசன் கேடயம் வழங்குவார். (இ- 69)

## குரங்குச் சேஷ்டை

சாவகச்சேரி ஜூலை 14

சாவகச்சேரி நகரிலும் அயலிலும் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

ஓர் ஆசிரியரின் அறைக்குள் கூட்டமாக உட்புகுந்த குரங்குகள் மேசை, அலுமாரியில் இருந்தவற்றை எடுத்தெறிந்து உடைத்ததுடன் அறையையும் அசுத்தப்படுத்தி விட்டுச் சென்றுள்ளன.

அண்மை நாட்களாக மாமரங்கள், முருங்கை ஆகியவற்றில் ஏறி இக் குரங்குகள் பெரும் நாசம் விளைவிக்கின்றன.

தொடரும் இந்தக் குரங்குச் சேஷ்டையைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

# விளையாட்டுமூலம் மாணவர் மத்தியில் ஒற்றுமை ஏற்படும்

முல்லைத்தீவு, ஜூலை 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டில் முதன்மை இடத்தைப் பலமுறை பெற்றது முல்லைத்தீவு மகாவித்தியாலயம். இம்முறை நெருக்கடிகள் மத்தியிலும் குறுகிய கால எல்லையில் இல்ல விளையாட்டுப் போட்டியைத் திறம்பட நடத்தியது பெருமைக்குரிய விடயம். நான் கொழும்பில் இருந்த போது இவ்வித்தியாலய மாணவி அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தலில் முதலாமிடத்தைப் பெற்றதை அறிவேன். விளையாட்டு மூலம் மாணவர் மத்தியில் ஒற்றுமை நிகழ்வதைக் காணலாம்.

முல்லைத்தீவு மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய முல்லை மாவட்டக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா மேற்கண்டவாறு கூறினார்.

போட்டிக்கு அதிபர் முல்லைமணி திரு. வே. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

வள்ளுவர் இல்லம் முதலாமிடத்தைப் பெற்றது.

பிரதம விருந்தினர் திரு. சி, தியாகராசா பரிசில்களை வழங்கினர்.

விளையாட்டுப்பொறுப் பாசிரியர் திரு.மு. தேவராசா நன்றி கூறினர். (இ-91)

# தமிழ்மொழிப் பாட பரீட்சையை மீண்டும் நடத்தக்கோரித் தந்தி

கிளிநொச்சி ஜூலை 14

பரீட்சை நிலையத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினல் தடைப்பட்ட தமிழ் மொழிப் பாடப் பரீட்சையை மீண்டும் உடன் நடத்தக்கோரி கிளிநொச்சி பிரஜைகள்குழு கல்வி அமைச்சுக்கு தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த ஆண்டு ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சை நடைபெற்ற சமயம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், கனிஷ்ட வித்தியாலயம், புனித திரேசா மகளிர் பாடசாலை ஆகிய பரீட்சை மண்டபங்களில் பரீட்சை தடைப்பட்டது.

இப்பாடம் மீண்டும் கடந்த ஜூலை 2ஆம் திகதி நடக்குமென எதிர் பார்க்கப்பட்டது.

ஆனல் பரீட்சை நடைபெருதது குறிப்பிடத்தக்கது. (இ-76)

## நெடுங்கேணியில் படையினர்தேடுதல்

ஒட்டுசுட்டான் ஜூலை14

நெடுங்கேணியைச் சேர்ந்த பெரியகுளம் ஒதியமலை பட்டுக்குடியிருப்பு, கோவில் புளியங்குளம், ஊஞ்சால் கட்டி ஆகிய கிராமப் பகுதிகளில் ஆயிரக் கணக்கான இந்திய அமைதிப் படையினர் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் (இ-113)

## அலரிக்காய் ஆபத்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 14

அலரிக்காய் சாப்பிடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

சமீப நாட்களில் 18 பேர் வரை யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இது குறித்து யாழ் பொலீஸ் பிரிவிலும் முறையிடப்பட்டுள்ளது.

வீடுகளில் அலரிமரம் வளர்ப்பதை தவிர்த்தால் இப்படியான சம்பவங்களை [illegible] தவிர்த்துக் கொள்ளலாம் என பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார். (இ-10)

## 90ஆவது நாள் நினைவு அஞ்சலி



சின்னையா இராசநாயகம்

தோற்றம்: 1958-04-13 மறைவு: 1988-04-17

ஆசைக்கோர் மகனே
ஆருயிர்க் கணவரே
அன்பிற்கோர் சகோதரனே
பாசத்தின் திருவிளக்கே
அருமைக்கோர் மாமாவே
அறிவிற்கோர் பொக்கிசமே.

ஆறுதலுக் கொரு தம்பி இருக்கின்முய் என நினைத்தோம். ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்ற தென்ன ஐயா. உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

உனது பிரிவால் துயருறும்:
அம்மா, மனைவி, மகள், அக்காமார், தங்கைமார், மச்சாள்மார், மருமக்கள், மாமிமார், மாமாமார், நண்பர்கள்.

அந்தியேட்டிக் கிரிகைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

பழைய ரோட்,
ஆனைக்கோட்டை. (5248)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
செல்லத்துரை
இராசம்மா

மலர்வு:- 05-04-1920
உதிர்வு:- 26-06-1987

துன்பங்கள் பல
சுமந்து கடமையே
வெற்றிக்கு வழி
என்று உறுதி கூறி
எம்மையெல்லாம்
நல்வழி அமைத்து
வாழ வைத்த எம்
தெய்வமே தாங்கள்
மறைந்து இன்றுடு
ஓர் ஆண்டு
சென்றுலும் நீங்கி
விட்ட உம் விம்பம்
நீச்சலடிக்கும்
எம் இதயங்களி
லிருந்து என்றுமே
நீங்காது நீங்காது
உம் நினைவுகள்.
உம் பிரிவால்
துயருறும்

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
1 ஆம் வட்டாரம்
ஆலம்புலம்
வேலணை கிழக்கு
(5249)

# பனம் பொருள் அபிவிருத்தி சபையின் தொழில் வாய்ப்பு

வடமராட்சி ஜூலை 14

ஸ்ரீ லங்கா இராணுவத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பனம்பொருள் அபிவிருத்திச் சபை தொழில் வாய்ப்பு அளிக்க உள்ளது.

பனம்தும்புத் தொழிற்சாலை, பன்னவேலைப் பயிற்சி நிலையம் போன்றவை சமரபாகு, தும்பளை, பொலிகண்டி போன்ற இடங்களில் உடனடியாக ஆரம்பிக்கப்பட உள்ளன.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை அதிகாரி எஸ். தங்கவேல் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார். (இ- 160)

## அண்ணமலை இசைத்தமிழ் மன்றம் யாழ்ப்பாணம்.

அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்ற இசையாசிரியர்களின் சம்பள நிர்ணயம்பற்றிக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளும் நோக்குடன் ஓர் கலந்தாலோசனைக் கூட்டம் 88-7-17ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியளவில் யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையருகிலுள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தவருது வருகை தரும்படி கேட்டுக் கொள்ளுகின்றேம்.

இணைச்செயலாளர்கள்.

(5053)

## 579 Over Seas Travels
## பிரயாண ஒழுங்குகள்

### SAUDI ARABIA
**(You One Company)**

| | |
|---|---|
| ஓட்டோ மெக்கானிக் | — 750 + 150 SR |
| காப்பென்ற சற்றறிங் | — 550 + 150 SR |
| ரில் (F) பிக்சர் | — 550 + 150 SR |
| ஸ்ரீல் (F) பிக்சர் | — 550 + 150 SR |
| எலக்ரிசன் | — 550 + 150 SR |
| மேசன் | — 550 + 150 SR |
| லேபர் | — 420 |
| Cyanco Harbour Labour | — 450 R |

### KUWAIT
**(National Cleaning Company)**

| | |
|---|---|
| கிளீனேர்ஸ் | 300:- 40 KD |

பாஸ்போட், போட்டோ 6 மற்றும் சகல ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

### HOUSE MAIDS

| | |
|---|---|
| Kuwait | 40 KD |
| Saudi (Over 30 Years) | 400 SR |
| Singapore | 200 SD |

பாஸ்போட், கலர் போட்டோ 1 போட்டோ 6 இத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பி கு.;- முற்பணம் அறவிடப்படமாட்டாது. மற்றும் பாஸ்போட், இந்தியா பாஸ்போட், (E.C) விசா, பொண்ட், ரிக்கற்றிங் மிகவும் துரிதகதியில் எம்மால் பெற்றுத் தரப்படும்.

No 86, Point Pedro Road,
Nallur Market, JAFFNA.
[5055]

## 6ஆம் மாத நினைவு அஞ்சலி



யேக்கப் தேவதாஸ் (மகோன்)

பூவுலகில்: 26-9-1946 விண்ணுலகில்: 14-2-1988

என் மகனே என்மகனே
எனவேங்கும் உன் தாயும்
உனதருமைப் பத்தினியும்
உன்செல்வப் பிள்ளைகளும்
பாங்கு மனப்பாசமுடன்
ஏங்கி என்றும் உனை நாங்கள்
விட்டு நின்று விம்முதற்கு வழியாயிற்றே
இவ்வுலக வாழ்வில்
உமக்கின்பம் இல்லையென்று
விண்ணுலகம் சென்றதென்னே
பேரின்பம் தேடி நீயும்

நீர் செய்த குறும்புகளை நித்தமும் எண்ணி எண்ணி ஏங்கிடவே செய்து விட்டு சென்ருயோ யேசுவிடம்.

என்று ஏங்கித் தவிக்கும்:
தாய், தந்தை, சகோதாரர்கள்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(5302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NIRU TUITION CENTRE
KONDAVIL

**A/L 90** கலை வர்த்தக விஞ்ஞானம்

விஞ்ஞான பிரிவு    யூலை - 15 ல் - 3.00 P.M
கலை, வர்த்தகம்    யூலை - 16 ல் - 3.00 P.M

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்)

**88 0/L DEC. பிரிவு 1**

**DAY CLASS**

(பகல் முழுநேர வகுப்புக்கள்)

✶ எமது வழமையான ஆசிரியர் குழுவினால் பாடசாலை போன்ற வசதிகளுடன் காலை 8–00 முதல் மாலை 1–30 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும்

ஆரம்பம்: 18-7-88 (காலை- 8-00)

(குறிப்பிட்ட தொகை மாணவர்களே அனுமதிக்கப்படுவர்)

(C 5767)



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## SAUDI OPERATION & MAINTENANCE COMPANY LIMITED

S. O. M. C.

| | | | |
|---|---|---|---|
| 1. | Hospital Cleaners Male | 456 | SR |
| 2. | Hospital Cleaners Females | 456 | SR |
| 3. | University Cleaners Males | 456 | SR |
| 4. | Masons | 600 | SR |
| 5. | Carpenters | 600 | SR |
| 6. | Drivers | 700 | SR |
| 7. | A. C. Mechanics | 650 | SR |
| 8. | Electricions | 650 | SR |
| 9. | Plumbers | 650 | SR |
| 10. | Mechanics | 650 | SR |

**AGE: 21 — 49 வரை**

**15-07-88ற்கு முன்னர் பிரயாணம் செய்யலாம்.**

## KUWAIT Cleaners

1. Male Hospital Cleaners - 30 KD

**AGE: 18 — 49 வரை**

● மு.கு: முற்பணம் யாதும் அறவிடப்படமாட்டாது. தங்கள் விசா பெற்றுத்தந்த பின்பு தங்கள் செலவுத் தொகையை அறவிடப்படும். மேலும் எங்கள் நிறுவனத்தால் பின்வருவோரை மட்டும் SUB AGENT ஆகநியமனம் செய்துள்ளோம். இவர்களைத் தவிர வேறு ஒருவரிடமும் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம்.

1. S. KOMALESWARAN
   Station Road
   Kokuvil
2. T. NAGARAJAH
   40/1, Ramanathan Road
   Jaffna
3. T. JEYARATNAM
   1/4, Convent Road
   Jaffna
4. K. NAGASIVAKUMARAN
   Araly North
   Vaddukoddai
5. V. R. SADACHARAM
   Maravanpulo
   Chavakachcheri.

இப்படிக்கு
S. THAMILVANAN
DIRECTOR

# T.V. TRAVELS & TOURIST

**BROWN ROAD,
(Kokuvil Railway Station Front)
KOKUVIL.**

(C 5739)


புத்தூர், கீரிமலை, உடுவில், தொல்புரம் பகுதிகளில்

# விவசாய ஓய்வூதிய திட்டத்தில் சேருவதில் பெண்கள் ஆர்வம்

மானிப்பாய், ஜூலை 14

புத்தூர், கீரிமலை, உடுவில், தொல்புரம் போன்ற பகுதிகளில் தான் அதிக எண்ணிக்கையான விவசாயிகள், விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதிலும் இப்பகுதிகளில் இருந்து முப்பது சதவீதமான பெண் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கமத்தொழில் காப்புறுதிசபை பிராந்திய பணிப்பாளர் திரு. சு. சிவகுரு இதனை தெரிவித்தார்.

மானிப்பாய் – சண்டிலிப்பாய் பகுதி விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டக் கருத்தரங்கு ஒன்றில் திரு. சிவகுரு உரையாற்றினார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இக் கருத்தரங்குக்கு சண்டிலிப்பாய் விவசாயிகள் சங்கத்தலைவரும் உடுவில் கமநல சேவைக்குழு உபதலைவருமான திரு. சு. தர்மசிலன் தலைமை வகித்தார்.

பிராந்திய பணிப்பாளர் திரு. சிவகுரு மேலும் கருத்துரை வழங்குகையில், கூறியதாவது:–

இந்த வருடம் ஜூன் மாதம் முடியும் வரை 1021 விவசாயிகள் ஓய்வூதியதிட்டத்தில் சேர்ந்துள்ளனர். இன்றும் 15 பேர் சேர்ந்துகொண்டுள்ளனர்.

விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் நன்மைகளை விவசாயிகள் உணரத் தொடங்கியுள்ளனர் என்பதனையே இதுஎடுத்துக்காட்டுகிறது.

விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட விவசாயித் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளும் ஓய்வூதியத் திட்டத்தில் மிக விரைவில் சேர்ந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளன.

இப்படி அவர் கூறினார்.

திரு. சு. தருமசிலன் தமது தலைமையுரையின் போது கட்டாக்காலி மாடுகளின் தொல்லை விவசாயிகளுக்கு பெரும் சிரமத்தைக் கொடுத்து வருவதால்கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் விவசாய உபகரணங்கள், பசளைவகை, விதைகள் போன்ற பொருட்கள் உரியநேரத்தில் வழங்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

மானிப்பாய் விவசாயிகள் சங்கத்தலைவர் திரு. சி. முதலியார், சண்டிலிப்பாய் பகுதி விவசாய பிரதிநிதி திரு. எஸ். முருகேசம்பிள்ளை, சண்டிலிப்பாய் கிராமசேவை அலுவலர் திரு. எஸ். கந்தசாமி, உடுவில் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு.சு. மகாதேவராசா ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (இ-90)

# முல்லைத்தீவு - மாத்தளன் பஸ் சேவை இல்லாததால் மக்கள் பெரும் அவதி

முல்லைத்தீவு — மாத்தளன் பஸ்சேவை இல்லாது இரணைப்பாலை, பொக்கணை, மாத்தளன், கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

இராணுவ நடவடிக்கை புதுக்குடியிருப்பில் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நாளாந்தம் ஐந்து சேவைகள் இடம்பெற்றன.

இப்போது இப்பகுதிகளுக்கு மக்கள் மீளக் குடியேறத் தொடங்கி உள்ளனர். ஆனால் பஸ் சேவை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

மாத்தளன் கிராமம் புதுக்குடியிருப்பில் இருந்து 6 மைல் தூரத்தில் உள்ள கல்வி சுகாதார வசதியற்ற பிற்போக்கான கிராமமாகும்.

இக்கிராம மக்களின் வசதியையொட்டி முன்னர் நாளாந்தம் ஐந்து சேவைகள் முல்லைத்தீவில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இப்போது அச்சேவைகள் இல்லாதலால் நோயாளிகள் பாடசாலை மாணவர்கள் என்போர் தமது அத்தியாவசிய தேவையின் பொருட்டு நாளாந்தம் 6 மைல்கள் நடந்து செல்லவேண்டி உள்ளது. (இ–126)

## பதினைந்தாவது ஒன்றுகூடல்

கலை, இலக்கியத்தின் பதினைந்தாவது ஒன்றுகூடல் "சிறுகதைநாள்" இன்று 14 ஆம் திகதி 9 மணிமுதல் மாலை 5–00 மணிவரைநடைபெறும்.

கலை, இலக்கியக் கழகத்தினரால் யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடத்தப்படும் இந்த வைபவத்திற்கு கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமை வகிப்பார். (இ–சி)

# நவில்ட் பழைய மாணவர்கள் சங்க ஆண்டு நிறைவு விழா

கைதடி – நவில்ட் பாடசாலை பழைய மாணவர் சங்க 21 ஆவது ஆண்டு நிறைவு விழா பாடசாலை மண்டபத்தில் தலைவர் திரு. ஏ. பாலநாயகம் தலைமையில் நடந்தது.

பழைய புதிய மாணவர்களிடையே கிரிக்கெட் வலைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

விழாவில் சங்கத்தின் ஆசிரிய ஆலோசகரும் நவில்ட் பாடசாலை துணை அதிபருமான திரு. க. கோபாலகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார்.

முன்னாள் தலைவர் திரு. க. சண்முகநாதனின் சேவையைப் பாராட்டி வாழ்த்துப் பத்திரமும் புதிய சைக்கிள் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ–75)

## நடமாடும் வைத்தியசாலை

கிளிநொச்சி பாரதிபுரம், அம்பாள்நகர், புதுமுறிப்பு மக்களின் நன்மை கருதி இப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நடமாடும் வைத்தியசாலை சேவையை ஆரம்பித்துள்ளனர்.

வியாழக்கிழமைகளில் பாரதிபுரத்திலும், செவ்வாய்க்கிழமைகளில் புதுமுறிப்பு பகுதியிலும் நடமாடும் வைத்தியசாலை இயங்குகிறது. (இ–76)

## கம்யூனிஸ்ட் பிரமுகர் சுகவீனம்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. எம். சி. சுப்பிரமணியம் கடும் சுகவீனம் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். (ச–69)

## விண்ணப்ப முடிவு திகதி யூலை 15

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற இருக்கும் ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சை (பழைய பாடத்திட்டம்) க்கான விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 15 ஆகும்.

(பழைய பாடத்திட்டத்திற்கமைய இப்பரீட்சை நடத்தப்பட இருப்பதால் ஜீ. சி. ஈ. சதாரண தரத்தில் தற்போது பயிலும் புதிய திட்டப்படி கல்வி கற்கும் மாணவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கக் கூடாது என [illegible] ஆணையாளர் திரு. [illegible] சேகா அறிவித்துள்ளார். (இ – 90)

# போதைவஸ்து பாவிப்போர் சமூகத்துடன் தொடர்பு இழந்த நிலையில் தனித்து வாழ்கின்றனர்

யாழ்ப்பாணம் ஜூலை 14

"மது ஹெரோயின், கஞ்சா போன்ற போதைவஸ்துகளைப் பாவிக்கும் இளம் தலைமுறையினர் சமூகத்தில் எந்தத் தொடர்பும் இல்லாமல் தனிமையாகவே வாழ்கின்றனர்."

கோப்பாய் உதவி வைத்தியர் எம்.நல்லைநாதன். போதைவஸ்தும் நடைமுறைகளும் என்னும் தலைப்பில் இளைஞர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சுகாதார வாரத்தை முன்னிட்டு இருபாலை அன்னை இந்திரா சனசமூக நிலைய மாதர் அணியினர் இந்த சுகாதாரக் கருத்தரங்கை நடத்தினர்.

உபதலைவி பா. பரிமளகாந்தியின் தலைமையில் கருந்தரங்கு நடைபெற்றது.

கருத்தருங்கில் உதவி வைத்தியர் [illegible]நாதன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

"போதைவஸ்துவுக்கு அடிமையானவர்களை பயமுறுத்தியோபேசியோ முடியாது. இவர்களை நாம் அன்போடும் பரிதாப உணர்வோடும் அணுகவேண்டும்.

"இவர்கள் தாமாகவே இனி போதைவஸ்துக்களைப் பாவிப்பதில்லை என மனதில் ஒரு திடசங்கற்பம் எடுத்தால் தான். இத்தீய பழகத்தில் இருந்து விடுபடலாம்" என்றார்.

இப்பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. கே. வருணநாதன் கலந்துகொண்டு 2000 ஆம் ஆண்டளவில் எல்லோருக்கும் சுகாதாரம் என்னும் பொருள்பற்றிப்பேசினர்.

போசகர் க. தர்மகுலசிங்கம் செல்வி சி.நிர்மலா ஆகியோரும் உரை நிகழ்த்தினர் செயலாளர் செல்வி செ. ஹேமலதா நன்றியுரை வழங்கினார்.

## விலை வீழ்ச்சி

கத்தரிக்காய் விலை என்றுமில்லாதவாறு கிலோ 2 ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது. (இ – 75)


# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்நகர்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

**A/L 90** கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 16-07-1988 காலை 8.00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல் : | திரு. கிருஷ்ணனந்தன் |
| கணக்கியல் : | திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகவியல் : | திரு. லங்கா |
| அளவையியல் : | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் : | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம்: | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| அரசியல் : | திரு. மஃறாவ் |
| புவியியல் : | திரு. குணராஜா |

(C/5757)



# G.C.E. (A/L) பௌதீகவியல்

ஆசிரியர்: N. பத்மநாதன்

(ஆரம்பம்: 17- 07- 88)

இடம்:-
1. நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட்
   திருநெல்வேலி
2. சந்தையடி லேன்,
   மானிப்பாய்.

A/L 90 Batch ஒளியியல்
A/L 89 Batch நீர்நிலையியல்

(பிற விபரங்களை நேரில் அறியவும்)

(5240)



# PERSONAL CLASSES FOR PHYSICS

ஆசிரியர்:
**R. சத்தியசிலன்**

இல. 21, மணல்தரை லேன்,
கந்தர்மடம் (யாழ்).

**A/L 90** ஆரம்பம்: 15-07-88 (வெள்ளி: 4.15 p.m.)

**A/L 89 நிலைமின்னியல்**

ஆரம்பம்: 15-07-1988
(வெள்ளி: 3.00 p.m.

(C 5759)



THE EXPRESS INSTITUTE KOPAY

# O/L யூலை

பரீட்சை எழுதிய மாணவருக்கான புதிய வகுப்புக்கள்

1. **A L Aug. 90**
   கலை / வர்த்தக / விஞ்ஞான / கணித பிரிவுகள்
   ★ யூலை 15 வெள்ளி பி.ப. 3.00 மணிக்கு
2. **O/L Dec. 88**
   4 மாத துரித மீட்டல் வகுப்பு
   (காலை 8.00 – பி. ப. 1.00)
   ★ யூலை 15 வெள்ளி காலை 8.00 மணிக்கு
3. **SPOKEN ENGLISH CLASS**
   By: Mr. THEVARAJAN
   ★ யூலை 15 வெள்ளி காலை 9.00 மணிக்கு
4. **A/L Aug. 90**
   பகல் முழுநேர வகுப்பு
   (கலை / வர்த்தக பிரிவு)
   ★ மாணவர் பெயர் பதிவின் பின் ஆரம்பமாகும்.

வெளிமாணவர்களில் ஒரு சிலர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவதால் முன்கூட்டியே பெயர் பதிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விரிவுரையாளர் பற்றிய விபரம் நேற்றைய உதயன் 5 ஆம் பக்கத்தில்

(C5772)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விறகு வெட்ட முடியாத நிலை

கிளிநொச்சி, ஜூலை 14
கிளிநொச்சிவிசுவமடுக் காட்டுப் பகுதியில் விறகு வெட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அமைதிப் படையினர் காடுகளில் தேடுதல் நடத்தி வருவதாலேயே காடுகளில் விறகு வெட்டத் தடைபிறப்பிக்கப் பட்டுள்ளது.

இதன் காரணமாக விறகு ஏற்றும் லொறிகளும் விசுவமடுப் பகுதிக்கு செல்வது நிறுத்தப் பட்டுள்ளது. (இ-76)

நீண்டகாலக் கோரிக்கைகள் புறக்கணிப்பு

# நில அளவையாளர் சங்கம் சட்டப்படி வேலை

கொக்குவில் ஜூலை 14
தமது நீண்ட காலக் கோரிக்கைகள் அரசாங்கத்தினால் நிறைவு செய்கப்படாததனால் அரசாங்க நிலஅளவையாளர் சங்கம் சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளது.

கடந்த இருவாரங்களாக சுகவீன விடுமுறையில் நிற்கும் இச்சங்கத்தைச் சேர்ந்த 1200 பேரும் அடுத்த வாரம் முதல் சட்டப்படி வேலை செய்யவுள்ளனர்.

இதனால் அரசாங்கத்தின் துரித மகாவலித் திட்டத்தில் அடங்கிய வேலைத்திட்டங்கள் உட்படப் பல அபிவிருத்தி வேலைகள் பின்தள்ளப் பட்டுள்ளன.

நிலஅளவையாளர் நாயகம் தவிர்ந்த பிரதி நில அளவையாளர், நில அளவையாளர் அத்தியட்சகர் உட்படப் பல தரங்களையும் உள்ளடக்கிய நிலஅளவையாளர் சேவையைச் சேர்ந்தவர்கள் இப்போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இப்போராட்டம் பற்றிய விவரமான கலந்துரையாடல்கள் இலங்கையின் அனைத்து நில அளவையாளர் பிரிவுகளிலும் நடாத்தப்பட்டு இப்போராட்டம்வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வருவதாக இச்சங்கத்தின் உதவிச்செயலாளர் திரு. K. சண்முகலிங்கம் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்

நிர்வாகமறுசிரமைப்பு குழு அறிக்கையிலிருந்து தயாரிக்கப்பட்ட பொது நிர்வாக சுற்று நிருப இல: 387 இல் நில அளவையாளர் சேவை விடுபட்டுள்ளதை கண்டித்தும் சம்பள உயர்வு கோரியுமே இப்போராட்டத்தை நாடு பூராவும் நடத்துவதாகவும், இதனால் அரசாங்கத்தின் கம் உதாவ, சுவர்ண பூமித் திட்டம் உட்பட பல அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் அரசாங்க நில அளவையாளர்சங்க உதவிச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய போராட்ட நிலை குறித்து எதிர் வரும் சனிக்கிழமை மாலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நில அளவையாளர் கந்தோருக்கு அண்மையில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நில அளவையாளர்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-69)

லயன்ஸ் தீர்மானம்

# மானிப்பாயில் தையல்,நெசவு வெல்டிங் பயிற்சி

மானிப்பாய் ஜூலை14
மானிப்பாய் லயன்ஸ் கழகத்துக்கான நிரந்தர அலுவலகக் கட்டடம் ஒன்றை நிறுவுவது என்றும் அதனுடன் கூடிய தையல், நெசவு, வெல்டிங் போன்ற கைத்தொழில் நிலையங்களை உருவாக்கி இப்பகுதியிலுள்ள வறிய, அநாதை மற்றும் விதவைகள் போன்றோரை தெரிந்தெடுத்து பயிற்சி அளிப்பதென்றும் மானிப்பாய் லயன்ஸ் கழகம் தீர்மானித்துள்ளது.

லயன்ஸ் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் மானிப்பாய் மஸ்கன் இல்லத்தில் லயன் எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

அப்போதே இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

வைபவத்துக்கு பிரதம விருந்தினராக பிரதி மாவட்ட கவர்னர் லயன் விஜயரத்தினமும், சிறப்பு விருந்தினராக முன்னாள் மாவட்ட கவர்னர் லயன். இராஜேந்திராவும் கலந்து கொண்டனர்.

பிரதம விருந்தினர் லயன் விஜயரத்தினம் உரையாற்றுகையில், இன, மத,மொழி வேறுபாடு இன்றி, இன்னல் படும் மக்களுக்கு சேவை செய்வதே லயன்ஸ் கழகத்தின் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

★ மானிப்பாய் கோவில்பற்றில் உள்ள நவாலி, மானிப்பாய் ஆகிய இடங்களில் உள்ள இரு அநாதை நிலைய சிறுர்களுக்கு ஒரு நாளுக்கு உணவு, உடைகள், புத்தாடைகள் வழங்குவது என்றும்-

★ சலரோகம், பற்சிகிச்சை, கண்பரிசோதனை ஆகியவற்றை டாக்டர்கள் மூலம் இலவசமாக அளிப்பதுடன் கருத்தரங்குகளை நடத்துவது என்றும்

★ கண், காது, ஊனமையான இளைஞர், யுவதிகளுக்குஏற்ற புனர்வாழ்வு நடவடிக்கைகள் எடுப்பது என்றும்,

★ இப்பகுதியிலுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு போதைவஸ்தின் தீமைகளை கருத்தரங்கு மூலம் விளக்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. [இ-90]

# கொத்தணி மூலாதாரக் கல்லூரியாக டிறிபேக்

சாவகச்சேரி,ஜூலை.14
சாவகச்சேரிக் கல்வி வட்டாரப்பாடசாலைகள் ஏழு கொத்தணி அமைப்புக்களாக இயங்கும். இதற்கான அனுமதியை கல்வி இலாகா வழங்கி உள்ளது.

தற்போது ஆறுக இயங்கும் கொத்தணி அமைப்புகளில் சில மாற்றங்களுடன் சாவகச்சேரி நகர கொத்தணி புதிதாக நடைமுறைக்கு வருகிறது.

டிறிபேக் கல்லூரியை மையப் பாடசாலையாகக் கொண்ட இக்கொத்தணியில் மகளிர் மகா வித்தியாலயம்,நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியா சாலை, கல்வயல் சிவப்பிரகாச வித்தியா சாலை, கல்வயல் சண்முகநாத வித்தியா சாலை, சாவகச்சேரி சக்திஅம்மன் பாடசாலை, சாவகச்சேரி றோ.க. பாடசாலை தனங்கிளப்பு அ. த. க. பாடசாலை,மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியா சாலை ஆகியவை இடம் பெறும்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் திரு. க. பாலச்சந்திரனே இக் கொத்தணி அதிபராக இருப்பார். (இ-31-75)


## சினிமா ஒப்பரேட்டர் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான படமாளிகை ஒன்றுக்கு சினிமா இயந்திரம் பழுது பார்க்கக் கூடிய சிறந்த அனுபவம் உள்ள ஒப்பரேட்டர் உடனடியாகத் தேவை. 20- 07- 1988 க்கு முன்பதாக தகுந்த சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.
இல. 276, C/o உதயன்,
யாழ்ப்பாணம். (5237)


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



திருமதி கந்தையா நாகம்மா
தோற்றம்: 25—05—1919
மறைவு: 14—06—1988

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்மையெல்லாம் வளர்த்து வையகத்தில் நற் பிரஜைகளாய் உலாவ விட்ட அன்புத் தெய்வமே, எம் வாழ்வில் ஒளி விளக்காய் ஒளி தந்து இறைவனடி சேர்ந்து விட்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பலவழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் வருகை தந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
இல. 40, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். (5030)

### உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன

காங்கேசன்துறை, ஜூலை 14
வலி - வடக்கு பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட 87 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட இந்த உணவுப் பொதிகள் வலி-வடக்கு பிரசைகள் குழுக்களின் அனுசரணையுடன் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் வைத்து வழங்கப்பட்டன.(ச-68)

## மகா விஷ்ணு பாடசாலை இல்ல போட்டிகள்

கைதடி, ஜூலை 14
கைதடி நாவற்குழி மகா விஷ்ணு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி அண்மையில் நடை பெற்றது.

பாடசாலை அதிபர் திரு. வே. இராமர் தலைமையில் நடை பெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பச்சைஇல்லமும், இரண்டாம் இடத்தை சிவப்பு இல்லமும் பெற்றுக் கொண்டன.

இந்த விளையாட்டுப் போட்டிக்குப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கைதடி வலயப் பாடசாலைகளின் கொத்தணி அதிபர் திரு. சோ. கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி திருமதி புஷ்பா கணேசலிங்கமும் கலந்து கொண்டனர்.

(இ)

# ஜெயலலிதா அணி ஆதரவாளர் 200 பேர் கோடம்பாக்கத்தில் கைது!

சென்னை, ஜூலை 14
அ. தி. மு. க. ஜெயலலிதா அணியைச் சேர்ந்த சுமார் 200 பெண் தொண்டர்கள் கோடம்பாக்கத்தில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

'மக்கள் குரல்' மாலைத் தினசரி அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டஞ் செய்தபோது அவர்கள் கைதாகினர்.

ஆர்ப்பாட்டத்தின் போது 'ஜான்ஸி ராணியான எங்கள் தலைவியை கனவுராணி என எழுதாதே' என்று அவர்கள் கோஷமிட்டனர். கைதானவர்களில் நடிகை மாடிலட்சுமியும் ஒருவர்.

கடந்த வாரத்தில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றது. (அ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளையாட்டரங்கு

ஜொலிஸ்ரார் ஏற்பாட்டில்

# 'ஷப்ரு' கிண்ணப்போட்டி 14 அணிகள் மோதும்

யாழ்ப்பாணம், ஜூலை. 14
ஷப்ரு யுனிக்கோ பிறன்ஸ் லிமிட்டெட்டின் ஆதரவில் ''ஷப்ரு'' சுற்றுக்கிண்ணத்திற்கான யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியும், வடமாகாணத்தில் உள்ள 14 பிரபல்யமான கிரிக்கெட் அணிகள் மோதவிருக்கின்றன.

மேலும் அணிகளின் ஒழுங்குமுறைசெவ்வாய் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தின் போது குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டது.

மோதும் அணிகள் பின்வருமாறு:—

குறூப்- ஏ
- ★ ஜொலி ஸ்ரார்ஸ் வி. க
- ★ கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி. க.
- ★ மல்லாகம் சிவப்பு நட்சத்திர வி. க.
- ★ ஐந்து நட்சத்திர வி. க.
- ★ இளம் நட்சத்திர வி. க.
- ★ சென்றலைட்ஸ் வி. க.
- ★ ஓல்ட் கோல்ட்ஸ் வி. க.

குறூப்- பி
- ★ ஜொலியன்ஸ் வி. க.
- ★ கிருஸ் கொப்பர்ஸ் வி. க.
- ★ யங் பற்றீசியன்ஸ் வி. க.
- ★ யாழ். பல்கலைக் கழக வி. க.
- ★ ஷப்ரு வி. க.
- ★ ஸ்ரான்லி வி. க,
- ★ நொதேர்ண் வி. க.

பங்குபற்றும் கழகங்களின் தீர்மானங்களுக்கு அமைய எதிர்வரும் ஆகஸ்ட் 5 ஆம் திகதி போட்டி ஆரம்பமாகும். (உ-க)

## வட்டக்கச்சி கொத்தணி மெய்வல்லுநர் போட்டி

கிளிநொச்சி, ஜூலை 14
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சிக் கொத்தணி இல்ல மெய்வல்லுநர் போட்டி வட்டக்கச்சி கொத்தணி அதிபர் திரு. ப. அரியரத்தினம் தலைமையில் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இவ் விளையாட்டுப் போட்டியின்போது வட்டக்கச்சி கொத்தணி அமைப்பின் கீழ் உள்ள மூன்று பாடசாலைகள் பங்குபற்றின.

மூன்று பாடசாலை மாணவ மாணவிகள் அனைவரும் பாரதி, நாவலர், வள்ளுவன், சம்பன், ஒளவையார் என ஐந்து இல்லங்களாக வகுக்கப்பட்டு போட்டிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இப்போட்டியின்போது செல்வன் சி. நித்தியானந்தராசா என்பவரை இல்லத் தலைவனாகவும், செல்வி ச. கல்யாணி என்பவரை இல்லத் தலைவியாகவும் கொண்ட நாவலர்இல்லம்(சிவப்பு) 270 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

196 புள்ளிகளைப்பெற்ற வள்ளுவன் இல்லம் [நீலம்] இரண்டாம் இடத்தையும், ஒளவையார் [பச்சை] இல்லம் மூன்றும் இடத்தையும், பாரதி [மஞ்சள்] இல்லம் நான்காம்இடத்தையும், சம்பன் [ஊதா] இல்லம் ஐந்தாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. நா. சோதிநாதன் வழங்கினார்.

விளையாட்டுச் செயலாளர் திரு. க. பாலகெங்காதரன் நன்றியுரை நல்கினார். (இ-76)

## சிறுவர் விளையாட்டு பேட்டி

யாழ்ப்பாணம், ஜூலை14
அரியாலை சனசமுக நிலைய பாலர்பாடசாலைச் சிறுவர்களின் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்குழமை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ள இப்போட்டிக்கு திரு. வி. ஆறுமுகமும்அவரது பாரியாரும் பிரதமவிருந்னர்களாக கலந்து கொள்வார்கள். (இ-5)

# யாழ்.முஸ்லிம் லீக்கும் வவுனியா மாவட்ட அணியும் இன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை14
சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் வவுனியா மாவட்ட அணியும் யாழ். முஸ்லிம் லீக் அணியும் இன்று வியாழன் மோதவுள்ளன.

இப்போட்டி வவுனியா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

வவுனியா அணியின் கப்டனாக திரு. எஸ். நகுலேஸ்வரன் இருப்பார்.

யாழ். அணிக்கு எம். முஸாத்திக் கப்டன்.

வவுனியா நியூசெயின் ஸ்டோர்ஸின் ஆதரவில் இம்மோதல் நடைபெறுகிறது.

இப்போட்டியைஜனாப் எம். எஸ். எம். ஜலீலுடன் வவுனியா - கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.ஏ. எஸ். குணரத்தினமும் ஒழுங்கு செதுள்ளார்.

### பிரெஞ்சு நட்புறவுச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
பிரஞ்சு தேசிய தினத்தைக் கொண்டாடும் முகமாக யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்தில் ஒன்று கூடலும் கூட்டமும் இன்று நடைபெறவுள்ளன. (சி)

தொண்டமனாறு

## வீரகத்திப்பிள்ளை வித்தியாலய திருத்தவேலை பூர்த்தி நிலையில்

வடமராட்சி, ஜூலை 14
தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத் திருத்த வேலையில் ஒருபகுதி பூர்த்தியாகும் தறுவாயில் உள்ளது.

கடந்தகால ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையின்போது பலத்த சேதத்திற்குள்ளான இந்த வித்தியாலயக் கட்டடத்தை போருட் ஸ்தாபனம் கல்வித்திணைக்கள அனுமதியுடன் திருத்தி வருகிறது.

இதன் முதற்கட்டமாக இருமாடிக் கட்டடத்தின் ஒருபகுதி முற்றாகத் திருத்தப்பட்டு விட்டது.

தேவையான தளபாடங்களை றெட்பானா அன்பளிப்புச் செய்துள்ளது.

இம்மாத நடுப்பகுதியில் மாணவர் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக அதன் அதிபர் எஸ். யோகச்சந்திரன் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-160)

## பதவி உயர்வு



யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக பல காலம்கடைமையாற்றிய திரு. க. ஜெயரத்தினம் உப அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் கடந்த சிலகாலமாக இக் கல்லூரியில் வணிகத்துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

### கிணறுகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 14
பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள செல்வபுரம், அறத்திநகர் ஆகிய கிராமங்களுக்கு தலா இரு கிணறுகள் கட்டி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் நிதி உதவியுடன் யாழ். பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு அமையம் இதனை அன்பளிப்புச் செய்துள்ளது. (இ)


## A/L 90

சனி, ஞாயிறு வகுப்பு

1. 15: பிரயோக கணிதம்
2. 30: தூய கணிதம்

ஆரம்பம்: 23. 7. 88

ஆசிரியர்: திரு. ரவி மோகன் யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(5048)


## 106ஆவது நினைவு தினமும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்: 16—8—1958
விண்ணில்: 15—3— 1988

K. சண்முகராசா
(கொலண்டில் அகாலமரணமடைந்த - சண்)

தாயிங்கே தவித்திருக்க
தரணியெல்லாம் விழித்திருக்க
சக்கரமே நின்றதடா - உன்
சரித்திரமே முடிந்ததடா....
ஊருலகம் மாறிடினும்
உள்ளுணர்வு மாறவில்லை - உனக்கு
அதனால் தான்.,...
தாய் நாட்டிற்காய்
நின்னுயிரை நல்கிவிட்டாய்
கொலண்ட்டதுவில்..
தரைவீழ்ந்த தாமரையே...
மணமிழந்த மல்லிகையே...
தாலாட்டு உனக்கு...
தாய்நாடே சொல்லும்....

-உற்றுர், உறவினர், நண்பர்கள்-,
தாவடி வடக்கு,
கொக்குவில். ( 5228 )


## ★ அறிவொளி கல்விக் கழகம் ★

நல்லூர்

A|L 90 விஞ்ஞான வகுப்புக்கள்

ஆரம்பம்: 20-07-88 4. 30 p.m.

[விபரங்கள்: 18-07-88 உதயனில்] (C-5778)

### பொய்யாமொழி

**குறள்:**
முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந்துறும்.

**பொருள்:**
ஒருவன் விருப்பம் கொண்டாலும், வெறுப்புக் கொண்டாலும், அவனுடைய முகம் முற்பட்டு அதைத் தெரிவிக்கும், அம் முகத்தைவிட அறிவுமிக்கது உண்டோ?


## உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
14-07-1988 த. பெ. இல. 23


## தெற்கில் வெடிக்குமா ஓர் அரசியல் பூகம்பம்?

இன்று தென்னிலங்கையில் நான்கு நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடைபெற உள்ளன.

நாடு கொந்தளித்தாலும், மக்கள் அச்சத்துடன் வாழ்ந்தாலும், மக்களின் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்பட்டாலும்—

ஜனநாயகத்தின் மீது தமக்கு அசையாத நம்பிக்கையும், பற்றும் உண்டு என்று வெளி உலகுக்குக் காட்டுவதற்காகவே — இடைத் தேர்தல்களை அரசு நடத்துகின்றது என்று கொள்ளவேண்டி உள்ளது.

தென்னிலங்கையில் நாளுக்கு நாள் வன்செயல்கள் அதிகரிக்கின்றன. தினமும் கொலைகள் விழுகின்றன. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடக்கின்றன. மோதல்கள் இடம் பெறுகின்றன,

வடக்குக் - கிழக்கு வாழ் தமிழ்மக்களைப் போலவே, தென்னிலங்கை வாழ் மக்களும் பாதுகாப்பில்லாத, நிச்சயமில்லாத வாழ்க்கையை நடத்துகிறார்கள். அமைதி என்பது துட்டுக்கும் இல்லாத சூழ்நிலையில் இடைத் தேர்தல்கள் இன்று நடக்கப் போகின்றன.

அமைதியற்ற சூழ்நிலையில் தேர்தல் அவசியம்தானா? மக்கள் பதற்றமுற்ற நிலையில் தமது வாக்குகளைச் சரியாகப் பயன்படுத்த முடியுமா? வாக்குச் சாவடிகளுக்கு அச்சமின்றிப் போய் வருவார்களா?

சட்டம் மக்கள் வசதிக்காகத்தான் இயற்றப்படுபவை. சட்டவிதி சொல்கிறது என்பதற்காக மக்கள் பாதுகாப்பைப் பணயமாக வைத்து தேர்தல் நடத்துவது நியாயமானதா? சட்டத்துக்கு முதலிடமா? மக்களுக்கு முதலிடமா?

பொதுசன பாதுகாப்பு இல்லாத வேளையில், ஆயுதப்படையினரைக் கொண்டு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகக் கூறித் தேர்தல் நடத்தினால், அது அமைதியான சூழ்நிலையில் நடத்தப்படும் சுதந்திரமான தேர்தலுக்கு நிகரானது என்று கூற முடியாது.

மக்களின் பாதுகாப்புச் சந்தேகத்துக்கு உரிய சூழ்நிலையில், படையினர் பாதுகாப்பு வழங்க நடக்கும் தேர்தலை இராணுவ ஆட்சியின் கீழ் நடக்கும் தேர்தலுக்கே ஒப்பிடலாம்.

அவ்வாறான தேர்தல்களில், தில்லுமுல்லுகளும், குளறுபடிகளும், ஊழல்களும் நடந்தே ஆகும்.

அப்படியான ஒரு தேர்தலை வடக்குக் கிழக்கிலும் நடத்தவும் ஜனாதிபதி திட்டமிடக் கூடும்.

அது ஒரு புறமிருக்க அவசரக்காலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இரண்டையும் கேடயங்களாகக் கொண்டு அரசு எதிர்க்கட்சிகளை அடக்கும் அராஜகத்தில் ஈடுபட்டு வருகிறது.

அதே வகையில், எதிர்க்கட்சிகள் சில வன்செயல்களைத் தூண்டிவிடுவதிலும், பின்னின்று நடத்துவிப்பதிலும் ஈடுபடவே செய்கின்றன.

ஒரு புறத்தில் அராஜகமும்,மறுபுறத்தில் ஜனநாயக விரோதமும். மூன்றாவது முனையில் தீவிரவாதமும் வன்செயல்களுமாகத் தெற்கில் பெரும் அரசியல் நெருக்கடியும், அரசியல் சூறாவளியும் மையங்கொண்டு வருகின்றன.

மேலும் சிவில் யுத்தம் ஒன்று ஏற்படலாம் என்று எண்ணும் அளவுக்கு வீதிப் போராட்டம் நடத்தப்போவதாக ஆளும் கட்சியின் தலைவர் திரு. ரஞ்சன் விஜயரத்தினாவும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்காவும் வெளிப்படையாகச் சூளுரைத்து வருகிறார்கள். அந்தச் சூளுரைகள் செயற்படுமாற்போல, தேர்தல் கூட்டங்களில் தாக்குதல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இவற்றை எல்லாம் கூட்டு மொத்தமாகக் கணக்கிடும் போதும், அதிகாரத் தலைவர்கள், அரசியற் தலைவர்களின் நாக்குகள் நிலை மறந்து கண்டமாதிரி வளைவதை நோக்கும் போதும் தெற்கில் மிக விரைவில் பெரும் அரசியல் பூகம்பம் ஒன்று பூதாகாரமாக வெடிக்கலாம் என்ற அச்சமே எழுகிறது!

நெருக்கடி நிலையை சாட்டாக வைத்து பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றை நடத்தாமல் இராணுவ ஆட்சி ஒன்று பிரகடனப் படுத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!!

# அரசு அதிகாரியின் கைப்பாவை ஜெயலலிதா!
# முன்னாள் மந்திரி திருநாவுக்கரசு கண்டனம்

## 'ஜெ' அணி மோதல் தீவிரமடைகிறது

சென்னை, ஜூலை 14
அ.தி.மு.க(ஜெ)அணியின் பொதுச் செயலாளர் என்று பேருக்கு ஜெயலலிதா இருக்கிறார். கட்சியை நடத்தியவர் அரசு அதிகாரி நடராஜன்.

இப்படி ஜெ. அணித் தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் எஸ். திருநாவுக்கரசு குற்றஞ்சாட்டினார்.

திரு. திருநாவுக்கரசு மேலும் சொன்னதாவது: கட்சியை பொதுச் செயலாளர் நடத்தவில்லை. அவருக்கு மேல் ஒரு தலைமை ஏற்பட்டு, அரசு அதிகாரி நடராஜன் நடத்துகிறார் என்ற உணர்வு எல்லா மட்டத்திலும் உள்ளது. இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

நடராஜன் பொதுக் கூட்டமேடைகளில் பேசவில்லையே தவிர கட்சியின் அனைத்து விஷயங்களிலும் தலையிடுகிறார்.

அவர் குடும்ப நண்பர் என்று ஜெயலலிதா சொல்கிறார். அவர் குடும்ப நண்பராக இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சினை தோன்றியிருக்காது. கட்சி, பொதுச் செயலாளரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

பொதுச்செயலாளர் அடிக்கடி தஞ்சை மாவட்டம் கூத்தாநல்லூர் செல்வதாக செய்தி வந்துள்ளது. அது கோடை வாசஸ்தலமா? புண்ணியஸ்தலமா? அந்த ஊருக்கு பொதுச் செயலாளரை அழைத்துச் சென்று தங்க வைப்பதால் அந்த அதிகாரிக்கு பெருமை ஏற்படுமே தவிர கட்சிக்கு நல்ல பெயர் ஏற்படாது. பொதுச் செயலாளர் அங்கு சென்றதால் எவ்வளவு கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளது என்பதை மக்கள் அறிவார்கள்.

இப்படி திரு. திருநாவுக்கரசு தெரிவித்தார். (எ)

## மைக் ஜாக்ஸன் லண்டன் விஜயம்

லண்டன், ஜூலை 13
பிரபல பாடகர் மைக்கல் ஜாக்ஸன் நேற்று லண்டன் சென்றடைந்தார். பிரிட்டனில் இசை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக அவர் அங்கு சென்றிருக்கின்றார்.

ஹீத்றூ விமான நிலையத்தில் வந்திறங்கிய ஜாக்ஸனுக்கு பொலீஸார் பலத்த பாதுகாப்பு வழங்கினர்.

ஜாக்ஸனின் குழுவில் 200 பேர் உள்ளனர். (எ)

ஜனநாயகக் கட்சி
## உப ஜனாதிபதி வேட்பாளர் சென. லொயிட் பென்ஸன்

வாஷிங்டன், ஜூலை 13
ஜனநாயகக் கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளராக செனட்டர் லொயிட் பென்ஸன் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் கிடைத்த திரு. மைக்கல் டுகாகிஸ் இத்தெரிவைச் செய்திருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கு பூர்வாங்கத் தேர்தல்களில் போட்டியிட்டு தோற்றவண. ஜெஸிஜாக்ஸன் உபஜனாதிபதி வேட்பாளராகத் தன்னைத் தெரிவு செய்யும்படி கோரியிருந்தார்.

செனட்டர் பென்ஸன் உபஜனாதிபதி வேட்பாளராக நியமனஞ் செய்யப்பட்டது வண. ஜாக்ஸனின் ஆதரவாளர்களுக்கு ஏமாற்றத்தை அளித்து உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆத்திரப்படும் அளவுக்கு நான் முதிர்ச்சி அடையாதவன் அல்ல என்று வண. ஜெஸி ஜாக்ஸன் இது குறித்துக் கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார். (எ)

## மீண்டும் மரணதண்டனை ஒத்திவைப்பு!

ஜோஹன்னஸ்பேர்க், ஜூலை 13
ஷார்ப்வில் கொலை வழக்கில் ஆறு கறுப்பு இனத்தவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றுவதை தென் ஆபிரிக்க அரசு மீண்டும் ஒத்திவைத்து உள்ளது.

தீர்ப்பை சட்டபூர்வமான வழிகளில் ஆட்சேபித்து நீதிமன்றத்தில் முறையிட கால அவகாசம் கொடுப்பதற்காகவே ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று நீதி அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இவர்களின் மரணதண்டனை நிறைவேற்றப்படவிருந்தது.

கறுப்பு இன துணை மேயர் ஒருவரைக் கொன்றதற்காக இவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. (எ)

வெளி உலகில்

## மீண்டும் ஒத்திவைப்பு!

மெக்ஸிகோ, ஜூலை 13
மெக்ஸிகோ ஜனாதிபதித் தேர்தல் முடிவை அறிவிப்பதை, அரசு மீண்டும் ஒத்திவைத்துள்ளது.

இதனை அறிவித்த உள்துறை அமைச்சர், ஒத்திவைப்புக்கான காரணத்தை வெளியிடவில்லை.

இந்த நடவடிக்கை எதிர்கட்சிகள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. (எ)

## பிலிப்பீன்ஸில் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ்

மணிலா, ஜூலை 13
பிலிப்பீன்ஸில் உள்ள அமெரிக்கத் தளங்கள் தொடர்ந்து இருப்பது பற்றி சுமுகமான உடன்பாடு காணப்படும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் தெரிவித்தார்.

மணிலாவில் செய்தியாளர் மத்தியில் பேசிய போது அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

பிலிப்பீன்ஸில் உள்ள அமெரிக்கத் தளங்களின் குத்தகைக் காலம் 1991 ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

நாஞ்சில் பேச்சு:
## கல்லறை செல்லும் வரை கலைஞரே என் தலைவன்!

சென்னை, ஜூலை 13
தி.மு.க தலைவர் கருணாநிதி பொன்விழா பொதுக்கூட்டம் திருச்செங்கோட்டில் நடந்தது தி.மு.க துணைப்பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் கலந்து கொண்டு பேசினார்.

அவர் சொன்னதாவது தமிழ் நாட்டு அரசியல் களங்கப்படுத்தப்பட்டு கற்பழிக்கப்பட்டு எந்த அளவு திசைதிருப்பப்படுகிறதுஎன்பதைக் கண்டு வேதனைப்படுகிறேன்.

அகில இந்திய அரசியலைப் பேசிய நாம், ஆட்சியில் உள்ளவர்கள் செய்யும் தவறை சுட்டிக் காட்டிப் பேசிய நாம், மாநிலத்துக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று பேசிய நாம் இன்று தெரு ஓரத்து பெண்ணைப்பற்றி பேச வேண்டிய துர்பாக்கிய நிலைஏற்பட்டுஉள்ளது.

இங்கே ஜெயலலிதா என்ற பெண் இருக்கிறார் 18 வயதுக்குக் கீழ்உள்ள விசிலடிக்கும் கூட்டம் தான் அவரின் பேச்சைக் கேட்கிறது. இதை வைத்து தமிழ் நாடு தனது காலடியில் என்று கருதுகிறார் அவர்.

தமிழ்நாட்டு மக்கள் இளிச்சவாயர்கள் அல்ல.

தமிழ் நாட்டுக்கு கலைஞரை விட்டால் நாதியில்லை என்று உலகமே சொல்கிறது.

உயிர் உள்ளளவும், கல்லறை செல்லும் வரை என் ஒரே தலைவன் கலைஞர். அவர் இடும் கட்டளையை ஏற்று நடக்கும் தொண்டன் நான்-

இப்படி நாஞ்சில் மனோகரன் சொன்னார். (எ - 4)

## சோவியத் யூனியனில் மாநிலத் தகராறு தீவிரமடைகிறது

அஸர்பைஜான், ஆர்மெனியா மாநிலங்களுக்கு இடையேயானபிரதேசப் பிரச்சினை மேலும் இறுக்கம் அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அஸர்பைஜானுடன் தற்போது உள்ள கரபாப் பகுதியைப் பிரித்து எடுத்து ஆர்மெனியா மாநிலத்துடன் சேர்ப்பது என்றதீர்மானத்தை கரபா பகுதி உள்ளூர் பிரதிநிதிகள்சபை எடுத்து உள்ளது.

தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

தீர்மானத்தின்படி கரபா பிரதேசம் ஆர்மெனியா மாநிலத்தில் சுயாட்சியுடனான பகுதியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சர்வஜன வாக்கெடுப்புஇன்றி
## நிரந்தர இணைப்பு இல்லை என்பதை ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறுவாரா?

### சிறிமா சவால்

கொழும்பு, ஜூலை 14
சர்வசன வாக்கெடுப்பு நடத்தாமல் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்புக்கு சம்மதிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறுவாரா?

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதிசிறிமவோ பண்டாரநாயக்கா இரத்தினபுரியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் முன் கண்டவாறு சவால்விடுத்தார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

சர்வசன வாக்கெடுப்பு இன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களின்நிரந்தர இணைப்புக்கு ஜனாதிபதி சம்மதித்திருப்பதாக நம்பிக்கையான தகவல் எனக்குக் கிடைத்துள்ளது.

இத்தகவல் பிழை என்றால், ஜனாதிபதி இதைப் பகிரங்கமாக மறுப்பாரா?

நாட்டின்பிரச்சினைகளுக்கு தான் காரணமில்லை என்றுஜனாதிபதிகூறி வருகிறார்ஆனால் நாட்டில் ஜனநாயகத்தை அழித்தவர் அவரே.

சுதந்திரக் கட்சி அரசு ஏற்பட்டவுடன் ஆளுநர்களும், முதலமைச்சர்களும் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

ஜனநாயகம் பற்றிப் பேச ஜனாதிபதிக்கு உரிமை இல்லை. 1962இல் சட்டபூர்வ அரசைக் கவிழ்க்க சதி நடந்தது. சதியில் ஈடுபட்டுபின்னர் பிரிவிகவுன்ஸில் தீர்ப்பினால் விடுதலையான எதிரிகளுக்கு ஜே. ஆர். அரசு உயர் பதவிகள் வழங்கியது. அப்படிப் பட்டவர் தான் இன்று ஜனநாயகம் பற்றிபேசி வருகிறார்.

நாட்டைப் பிரிப்பதை எதிர்க்கும்ஜே.வி.பி.யை ஒழிக்கப் போவதாக ஜெயவர்த்தனா கூறுகிறார். ஆனால் மறுபக்கம் நாட்டைப் பிரிக்க முயலும் பிரபாகரனுடன் பேச்சு நடத்த முயற்சிக்கிறார்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ)

## திருமலையிலிருந்து 'வசந்தம்' கலை இலக்கியச் சஞ்சிகை

திருகோணமலை, ஜூலை14
'வசந்தம், என்ற பெயரில் கலை, இலக்கிய சஞ்சிகை ஒன்று திருகோணமலையில் இருந்து வெளிவருகின்றது.

முதலாவது இதழின் வெளியீட்டு விழா அண்மையில் திருகோணமலை திருமுருகானந்த சங்க மண்டபத்தில் நடந்தது. திரு. க. கந்தசாமி தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திரு.பொ. ஜெகதீஸ்வரன் கலந்துகொண்டார்.

தமிழ் மொழிக்காக உயிர்நீத்த அனைத்து மக்களின் ஆத்மசாந்திக்காக கூட்ட ஆரம்பத்தில் மௌனாஞ்சலிசெலுத்தப் பட்டது.

'வசந்தம்' முதலாவது பிரதியை எழுத்தாளர் திருமலை சுந்தா வாங்கினார்.

திருமலையின் இன்றைய இலக்கிய வளர்ச்சி பற்றி திருமலை நவம் எம். ஏ. பேசினார்.

திருமலையில் இருந்து வெளியாகும் இலக்கிய படைப்புகளுக்கு யாழ் மாவட்ட மக்களிடமிருந்தும்பல்கலைக்கழகவட்டாரத்திலிருந்தும் போதியவரவேற்பும் ஆதரவும் கிடைப்பது இல்லை என்று திரு. நவம் குறைப்பட்டுக் கொண்டார்.

இக்குறைபாடு நீங்க யாழ்- நகரிலும் 'வசந்தம்' வெளியீட்டு விழா நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

சஞ்சிகையின் இணையாசிரியர்கள் திரு. க. கோணேஸ்வரன், திரு. [illegible] ஆகியோர் [illegible] (இ-எ)

சமய சந்திதிகளில்

### நவோத்ரசத சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை14
கொக்குவில் கிழக்கு அருள்தரு ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வைரவப் பெருமானின் உற்சவ மூர்த்திக்கு இக்கோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் நாளை வெள்ளி காலை 10 மணி அளவில் 'நாவோத்ரசத சங்காபிஷேகம்' நடைபெறவுள்ளது.

சங்காபிஷேக பிரதம குருவாக நந்தாவில் அம்மன் கோவில் பிரதம குரு வேதசிகாமணி சிவஸ்ரீ ஜெயந்தி நாதக் குருக்கள் கடமையாற்றுவார். (இ-6)

### உத்தரிய மாதா ஆலயத் திருவிழா

வயாவிளான் உத்தரிய மாதா ஆலய வருடாந்த திருவிழாக் கொண்டாட்டங்கள் 7-ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தினமும் மாலை 6 மணிக்கு நவநாட் பலிப்பூசைகளும் அருட்திரு சூசைநாதன் அடிகளாரின் அருளுரைகளும் இடம் பெறுகின்றன.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தேவநற்கருணை வழிபாடும் 16ஆம்திகதிசனிக்கிழமை காலை திருநாட்பலிப் பூசையும் இடம் பெறும் என்று பங்குத் தந்தை அருட்திரு நெற்கோ அடிகளார் தெரிவித்தார். (இ)

## 'மிரட்டல், அடாவடித்தனத்தில் யு.என்.பி. ஈடுபட்டுவருகிறது'

கொழும்பு. ஜூலை 14
மிரட்டல், அடாவடித்தனத்தில் யு என்.பி ஈடுபட்டு வருகின்றது.

ஜனாதிபதிக்கு அனுப்பிய அவசரத் தந்தியில் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன் கண்டவாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இரத்தினபுரியில் கைது செய்யப்பட்ட அனைவரும் ஜே.வி.பியினர் அல்லர். சட்டத்தை மதித்து நடக்கும் நீண்ட கால சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள்.

இடைத் தேர்தலில் தங்களுக்குத் தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்து கொண்ட யு.என்.பி.யினர் இப்பொழுது மிரட்டல், அடாவடித் தனத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்படியான நடவடிக்கைகளினால் நியாயமான சுதந்திரமான தேர்தலை நடத்த முடியாது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தனது தந்தியில் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. பயங்கரவாதின் இரத்தினபுரி தொகுதிக்குள் ஊடுருவியுள்ளார்கள் என்ற தகவலின் மீதே பொலீஸார் 50 பேரையும் கைது செய்துள்ளனர் என்று அரசு வட்டாரம் தெரிவித்தது. (எ)

## கனகாம்பிகை அம்மன் ஆலயத்துக்கு ரூ 10 லட்சம் செலவில் சித்திரத்தேர்

யாழ்ப்பாணம், ஜூலை14
கிளிநொச்சிப் பிரதேசத்தின் முதலாவது சித்திரத்தேர் அமைப்பு வேலை கிளிநொச்சி இரணைமடு அருள்மிகு ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் சுமார் பத்து லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலய தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. அ. க. செல்வராசா தலைமையில்தேர்த் திருப்பணி வேலையின் கால்கோள் விழா நடைபெற்றபோது கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. தேவசிகாமணி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் கே. துரைராசா கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் கே. குணராசா, நிர்வாக அதிகாரி கே. வீரபத்திரர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வி. எஸ். சுவாமிநாதன், கிளிநொச்சி பிரஜைகள் குழு உபதலைவர் கே. யோகராசா, செயலாளர் ஐ. நடராசா, கிளிநொச்சி வர்த்தகர் சங்கத் தலைவர் செல்லையா சிவசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலயபரிபாலனசபைத் தலைவர் வே. இராசேந்திரம், உபதலைவர் அ. பாலசுப்பிரமணியம், பொருளாளர் வை. பரமநாதன், கொழும்புக் (6-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ சேட்டிங் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு

யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.



# உதயன்

14 - 07 - 1988 வியாழக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுர ✶ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.


## ஜெயலலிதா 6 வருடங்கள் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை உருவாகுமா?

### சி. பி. ஐ. விசாரணையில் புதிய திருப்பம்

சென்னை, ஜூலை 14

அ. தி. மு. க. (ஜெயலலிதா) அணியின் செயலாளர் செல்வி ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடுவதை ஆறு வருடங்களுக்குத் தடை செய்யும் நிலை உருவாகுமா?

சென்னை அரசியல் வட்டாரங்களில் இதுபற்றிப் பேசப்படுகிறது.

அ. தி. மு. க. எம். பி. தங்கராஜுக்கு ஐந்து லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்க முயன்ற சி. பி. ஐ. வழக்கு விசாரணையில் உள்ளதல்லவா?

இந்த வழக்கில் ஜெயலலிதா, முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு ஆகியோரின் சாட்சியங்கள் மட்டுமே இன்னும் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளன.

இந்தக் கட்டத்தில் அ.தி.மு.க. (ஜெ) அணிக்குள் ஜெயலலிதா-திருநாவுக்கரசு மோதல் பெரும் நெருக்கடி நிலையை எட்டியிருப்பதாக அறியப்படுகிறது.

''தேர்தல் கமிஷன் நினைத்தால் ஆறு மாதங்களுக்குத்தான் தேர்தலைத் தள்ளிப்போட முடியும்! திருநாவுக்கரசு நினைத்தால், ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடுவதை ஆறு வருடங்களுக்குத் தள்ளிப் போடச் செய்து விடலாம்—இப்படி சென்னை அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

தங்கராஜுக்கு லஞ்சம் கொடுத்ததாகக் குற்றம் நிரூபணமானால், ஜெயலலிதா ஆறு வருடங்களுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை உருவாகும்.

ஜெயலலிதா அணியின் அதிருப்தியாளர் குழுவில் இருக்கும் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு, ஜெயலலிதாவுக்கு எதிராக இந்த வழக்கில் சாட்சியமளித்தால் வழக்கின் முடிவு ஜெயலலிதாவுக்கு எதிராகத் திரும்பிவிடும்.

இந்தச் சமயம் ஜெயலலிதா, நெடுஞ்செழியன், பண்ருட்டி இராமச்சந்திரன்: திருநாவுக்கரசு ஆகியோருடன் நடத்திவரும் சமரசப்பேச்சுக்கள் வெற்றிபெறும் என்று தோன்றவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் ஜெயலலிதாவில் 'நாய் வர்ணனை' மாவட்டங்களில் தொண்டர்களிடையே பூகம்பத்தைக் கிளப்பியுள்ளது. 'நாய் என்றெல்லாம் சொல்கிறார். இதையெல்லாம் கேட்பது தலை எழுத்தா?' - என்றெல்லாம் தொண்டர்கள் மாவட்டத் தலைவர்களை மறியல் செய்த நிகழ்ச்சிகள் பல இடங்களில் இடம்பெற்றன என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## மருத்துவபீட மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை. 14

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவ பீடத்தின் தற்போதைய நிலையும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

மருத்துவபீடத் தலைவர் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் உட்பட மருத்துவபீடவிரிவுரையாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள உள்ளனர்.

புதிய கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்பட அனைத்து மருத்துவ மாணவர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-5)

## விடுதலை.,

1-ம்பக்கத்தொடர்ச்சி)

சுமார் ஐந்து மாதங்கள் நீடித்து தற்போது முற்றுக முறிவடையும் நிலைக்கு வந்துள்ளன. ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்நிலை உருவானது மிகவும் கவலைக்குரியதாகும்.

பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஏதோ ஒரு வழியில் ஆரம்பிக்கவேண்டும் என்பதற்காக மேஜர் ஜெனரல் எஸ். வி. சர்தேஷ்பாண்டேயைச் சில நாட்களுக்கு முன்னர் சந்தித்தபோது புதிய அணுகுமுறை ஒன்றைத் தயாரித்தோம்.

இந்த அணுகுமுறை தொடர்பான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளே இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனால் பலன் ஏதும் ஏற்படுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

—இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

## முத்திரை...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

டது.

இதேவேளை தபால் மோசடி குறித்து சம்பந்தப்பட்ட தபாலக உத்தியோகத்தர்கள் தமது முறைப்பாடுகளை யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் பதிந்து வருகின்றனர். (க-10)

## தமிழ்ப் பகுதிகளில்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

லும் நண்பகலுக்குப் பின்னர் அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தன. டாக்சிகள் ஓட்டோக்களின் சேவையும் குறைவாகவே இருந்தன.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர் எண்ணிக்கையும் மிகவும் குறைந்து காணப்பட்டது.

யாழ். வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் நோயாளர்களும் குறைவாகவே காணப்பட்டனர்.

திரை அரங்குகள் எதிலும் காட்சிகள் நடைபெறவில்லை.

அங்காடி வியாபாரிகளும் தமது வியாபாரங்களை நேற்று நடத்தவில்லை.

இதேவேளை காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்ற பஸ்கள் யாவும் கிளிநொச்சியிலும், புளியங்குளத்திலும் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும்—

கொழும்பில் இருந்து வந்த சகல வாகனங்களும் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (அ-10-5)

## இந்திய அதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிரதிநிதிகளாக மூன்று ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தது தெரிந்ததே.

இங்கு இவர்கள் தங்கியிருந்த நாட்களில் முக்கிய தமிழ் பிரமுகர்களுடன் கலந்துரையாடியதுடன், இங்குள்ள நிலைமைகளையும் அவதானித்தும், கேட்டறிந்தும் சென்றுள்ளார்கள்.

திருகோணமலை சென்றுள்ள மூன்று இந்திய ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும் அங்கும் முக்கிய சில பிரமுகர்களுடன் கலந்துரையாடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இவர்கள் திருகோணமலையில் இருந்து கொழும்பு சென்று இலங்கை அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவர்.

கொழும்புப் பேச்சுகளின் பின்னர் இம் மூன்று அதிகாரிகளில் இருவர் இந்தியா செல்ல ஒருவர் வவுனியாவுக்குத் திரும்பி வருவார் என்று அறிய வந்தது. (அ-5,

## இடைத்தேர்தல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பதற்காக இலங்கை வானொலி, ரூபவாஹினி ஆகியவற்றின் இரவுநேர சேவைகள் இன்று நீடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## தென்னிலங்கை ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரச வங்கிக் கிளைகள் இனந்தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டன. 60 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

## பல்கலைக்கழக மாணவர் விடுதலை

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவரை விடுவிக்கும் பணி நேற்று ஆரம்பமானது. விடுதலையாகவுள்ள 23 மாணவரின் பெற்றோர்களிடம் அது சம்பந்தமான பத்திரங்கள் நேற்று அகில இலங்கை பௌத்த நிலயக் கட்டடத்தில் வைத்து வழங்கப்பட்டன.

ஏழு மாணவர் குற்றமிழைத்தவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தடுப்புக்காவலில் தற்போது உள்ள மொத்தம் 47 மாணவர்களில் எஞ்சிய 17 மாணவர்கள் பற்றி இம்மாத முடிவிற்குள் தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

## இருவர் தற்கொலை

முள்ளியவளையில் இரு குடும்பஸ்தர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான செ. யோகன் (வயது 35) நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இவர் குடும்பத் தகராறு காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார்

மற்றவர் எஸ். சண்முகம் (வயது 41) 4 பிள்ளைகளுக்குத்தந்தை.

தீராத நோய் காரணமாகக் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

## தொண்டர் டாக்டர்கள் 25 பேர் சேவையில்

### மட்டக்களப்புக்கும் 5 பேர்

யாழ்ப்பாணம் ஜூலை 14

தொண்டர் ஸ்தாபனங்களினதும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரதும் உதவியுடன் மொத்தம் இருபத்தைந்து தொண்டர் டாக்டர்களை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

யாழ், செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ஆர். தெய்வேந்திரன் இத்தகவலை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

யாழ் அரசினர் வைத்தியசாலையில் பன்னிரெண்டு பேரும். மந்திகை வைத்தியசாலையில் நான்கு பேரும், திருகோணமலை வைத்தியசாலையில் மூன்று பேரும் நடமாடும் வைத்திய சேவையில் ஆறு பேருமாக 25 டாக்டர்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மேலும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேவைபுரிய ஐந்து பேர் அனுப்பப்படவுள்ளார்கள்.

தொண்டர் சேவையில் ஈடுபட்டு வரும் டாக்டர்களுக்கு மிகவும்குறைந்த அளவு கொடுப்பனவே வழங்கப்படுகிறது. டாக்டர்கள் பற்றாக் குறையால் நோயாளர்கள் அல்லலுறுவதை தடுப்பதற்காகவே தொண்டர் டாக்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் டாக்டர் தெய்வேந்திரன் மேலும் கூறினார். (அ-5)

## வாகனங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம் ஜூலை 14

புனர்வாழ்வு அமைச்சுக்கு 41 கோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் இந்த வாகனங்களை நேற்று புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்கியது. (க - 10)

## இந்திய றொக்கட் மீண்டும் கடலில் வீழ்ந்தது!

பெங்களூர், ஜூலை. 14

இரண்டாவது ரோஹினி செயற்கைக் கோளை ஏற்றிக்கொண்டு வானுக்குச் சென்ற ஏ. எஸ். செல்வி 2 றொக்கட் சரியான பாதையில் செல்லத்தவறி கடலில் வீழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

பெங்களூரில் உள்ள ஸ்ரீஹரி கோட்டா விண்வெளி நிலையத்தில் இருந்து நேற்று பிற்பகல் வானுக்கு 'ரோஹிணி'யை ஏற்றிக்கொண்டு இந்த றொக்கட் வானுக்குச் சென்றது.

ஐந்து கட்டங்களாக இயங்கக் கூடிய இந்த றொக்கட்டின் முதல் இரண்டு கட்டங்களும் சரியாக இயங்கின என்றும் பின்னர் கோளாறு ஏற்பட்டதாகவும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் பேராசிரியர் யு. ஆர். ராவ் தெரிவித்தார்.

[illegible] ஆண்டு அனுப்பப்பட்ட செல்வி முதலாவது றொக்கட்டும், வானுக்கு சென்ற சில நிமிடங்களில்திசைமாறி கடலில் வீழ்ந்தது தெரிந்ததே.

ஏ. எஸ். எல். வி. றொக்கட்டைத் தயாரிக்க 6½ கோடிரூபா செலவானது.

றொக்கட் ஏற்றிக்கொண்டு சென்ற ரோகிணி-2 செயற்கைக் கோளைத் தயாரிக்க 2 கோடி ரூபா செலவானது. (உ-எ)

## இமையாணன் மாணவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

வடமராட்சி, ஜூலை 14

இமையாணன் மாணவன் ஒருவர் மர்மமான முறையில் மரணமானார்.

இமையாணன் தமிழ்க் கலவன்பாடசாலை மாணவன் செல்லையா யோகேஸ்வரன் (வயது 17) என்பவரே இறந்தவர்.

இந்த மாணவன் அண்மையில் நடைபெற்ற ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சை எடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கடந்த திங்கள் முதல் காணமல் போய் இருந்தார்.

இவரை இவரின் பெற்றோர் பல இடங்களிலும் தேடியபோது கரணவாய் தெற்கு முதலைக் குழி என்னும் இடத்திலுள்ள கிணறு ஒன்றினுள் இருந்து சடலம் மீட்கப்பட்டது. (இ-160)

## ஈரான் படகுகள்மீது அமெ. ஹெலித்தாக்கு!

பஹ்ரைன், ஜூலை 14

வளைகுடாவில் அமெரிக்க ஹெலிக்கொப்டர் ஈரானின் பீரங்கிப் படகுகள் இரண்டின் மீது றொக்கட் தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் பீரங்கிப் படகுகள் எண்ணெய்க் கப்பல் ஒன்றைத் தாக்கிய போதுதான் அமெரிக்க ஹெலிகொப்டர்கள் இத்தாக்குதலை நடத்தின.

ஈரான் தரப்பில் ஏற்பட்ட சேதம் பற்றி அறிவிக்கப்படவில்லை. அமெரிக்க தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

## வடக்கு, கிழக்கிற்கு மேலும் ரூ. 25 லட்சம்

கொழும்பு ஜூலை 14

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு ஐ. நா. அகதிகள் ஆணையாளர் பிரிவு மேலும் 25 லட்சம் ரூபா நன்கொடை வழங்கியிருக்கின்றது.

கொழும்பில் உள்ள ஐ. நா. அகதி ஆணையாளர் பிரதிநிதி, இப்பணத்திற்கான காசோலையை நேற்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் லயனல் குணத்திலகவிடம் வழங்கினார். (உ-எ)

## 120 பேர் உயிரிழப்பு

டாக்கா ஜூலை 14

பெரு வெள்ளம் காரணமாக பங்களாதேஷில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 120 ஆக அதிகரித்து உள்ளதாக அறிவிக்கப்பட்டது. (உ - எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. தம்பிப்பிள்ளை செல்வரத்தினம் (கிளாக்கர்)

ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்
உணவுத் திணைக்களம், கொழும்பு

இவர் உரும்பராய் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தம்பிப்பிள்ளை, திருநெல்வேலி வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், கொக்குவில் கிழக்கு காலஞ்சென்ற துரையப்பா, சாலஞ்சென்ற சோதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வி புஷ்பராணியின் அன்புக் கணவரும், விஜி, மேனகா (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி), சூரியகுமாரன் (பிரான்ஸ்) சந்திரகுமாரன், வாணிஸ்ரீ ஆகியோரின் அன்புத் தந்தையும், கொட்டடி சோமசுந்தரம் விஜேகாந்தனின் அன்பு மாமனாரும், புஷ்பராசா, கனகராசா (ஜேர்மனி), புஷ்பரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சின்னம்மாவின் மருமகனும், கனகரத்தினம் (விவசாய போதனாசிரியர், விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி) அவர்களின் மைத்துனரும், திருநெல்வேலி இளைப்பாறிய ஆசிரியர் இராசரத்தினத்தின் அன்புத் தம்பியும், திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியை கனகமணியின் அன்பு மைத்துனரும், ராதா (ஆசிரியை, வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை) சுதா, கீதா, லதா, ஆனந்தக்குமாரசுவாமி (ஜெயா), இராசகுமாரசுவாமி, செல்வக்குமாரசுவாமி, பாலக்குமாரசுவாமி (பாபு) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், பொன்னாலை பாலகிருஷ்ணன் ஜெகநாதனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நல்லையா, சாலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி பூரணம் நடராசா (கனடா)வின் பெறுமகனுமாவார். அன்னாரது பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக 14-7-88 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் இல்லத்தில் இருந்து கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: த. இராசரத்தினம்

(5250)

### திருமதி பேரம்பலம் சிதம்பரம்

திருமதி பேரம்பலம் சிதம்பரம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் முருகேசு பேரம்பலம் (உரிமையாளர் யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ், நுகேகொட, குமரன் ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், அருளாம்பிகை (முன்னாள் பங்காளர் - கண்டி பனையகாட் கொழும்பு), அருட்செல்வம்; பாலசுப்பிரமணியம் (உரிமையாளர் - கோபிநாத் நுகேகொட, கோபிநாத் வவுனியா), கமலாதேவி, சிவபாதம் (உரிமையாளர் - குகன் ரெக்ஸ்ரைல்ஸ் யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. சபாரத்தினம் (முன்னாள் உரிமையாளர் அருள் ரேடர்ஸ் - கிளிநொச்சி), காலஞ்சென்ற சு. நடராசா (இரத்தப் பரிசோதகர்), இராஜராசேஸ்வரி, வே. சிவசுப்பிரமணியம் (உரிமையாளர் யாழ். சென்றல் ரேடர்ஸ் யாழ்ப்பாணம்), தவமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீ பாஸ்கரன் (மேற்கு ஜெர்மனி), தயாளினி, மஞ்சுளா, மனோரஞ்சன், பாலினி, கோபிநாத், சுதாகர், சுகந்தன், சுகந்தினி, குகமாலினி, ரூபன், மயூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். ஈமக்கிரியைகள் (14-07-88) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பே. பாலசுப்பிரமணியம்
பே. சிவபாதம்

பொன்னுவளை,
களபூமி,
காரைநகர்.

(5061)




மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்

நிகழும் விபவ வருஷம் ஆனி மாதம் 30 ஆம் திகதி (14-7-88) இன்று வியாழக்கிழமை காலை 7மணி — 9 மணியளவில் வரும் சுபவேளையில்

"கமலேஸ்வரி களஞ்சியம்"

என்னும் வியாபார ஸ்தாபனத்தை திறந்து நடாத்த இருப்பதினால் இவ்வமயம் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
ஆ. பஞ்சரட்சரலிங்கம்,
(உரிமையாளர்)

கே. கே. எஸ். வீதி,
மையிலன்ஸ் பில்டிங்,
யாழ்ப்பாணம்.

(5301)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 14 - 07 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292,2 Navalar Road, Jaffna on Thursday 14 th July 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org